சித்தாறு பட்டணங்கால் திட்டத்தின் மூலம் இராதாபுரம் சானலை சுற்றியுள்ள கிராமங்களுக்கு சீராகத் தண்ணீர் கிடைக்கவில்லை. அங்கே தண்ணீர் தீர்வையைக் குறைக்க வேண்டும். அதன்மேலுள்ள லோகல் சர்சார்ஜையும் செஸ்ஸையும் ரத்துச் செய்வதே முறையாகும், பொருத்த மும் ஆகும். மறுபரிசீலனை செய்து அவற்றை ரத்து செய்ய வேண்டும்.

உரங்கள் வாங்க, கடன்கள் வாங்க விநியோகிக்க இருக்கிற ரயத் பாஸ் புக்கை திருநெல்வேலி மாவட்டத்திற்கும் துரிதமாக விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1—9—1972-ல் இருந்து கிராம அதிகாரிகளுக்கு ரூபாய் 7 ஊதியம் தனி உயர்வு கொடுக்கப்பட்டிருப்பதைப் பாராட்டுகிறேன். வீட்டுவரியை இவர்கள் வசூலிக்காது, தனி பில் கலெக்டர்கள் மூலம் பஞ்சாயத்துக் களில் வீட்டு வரி வசூல் செய்வது நல்லது என்று தெரிவித்துக்கொள் கிறேன்.

The educated are the most non-participants in things around them and bureaucrats are experts without local knowledge

என்ற இந்த இரண்டும் அறிஞர்கள் தம் அனுபவத்தால் சொல்லப் பட்டது. இன்றைக்கு எம்.பி.பி.எஸ்., பி.ஏ., பி.எஸ்.ஸி. அக்ரிகல்சர் ஆகிய அனைவருக்கும் படித்துவிட்டு வந்தவுடன் கொடுக்கிற போஸ்டே கெஜெடெட். இப்படி கெஜெடெட் என்பதற்கே மரியாதை இல்லாமல், மதிப்பு இல்லாமல் செய்கிறோம். ஆனால் இன்று கூட பி.பார்மஸியாளரை யும் கெஜெடெட்டாக நல்வாழ்வுத்துறை அமைச்சர் அறிவித்தார்கள். ரெவின்யூ டிபார்ட்மெண்டில் 25, 30 வருட அனுபவங்களுக்குப் பிறகு தாசில்தாராக வந்து பணியாற்றுகிறார்கள். என்றென்றும் அரசு திட்டம், சமூக திட்டங்களுக்கு ஒத்துழைக்கும் முதுகெலும்பானவர்கள், அந்த தாசில்தார் போஸ்டை நாம் கெஜெடெட் ஆக்கவில்லை. அதை கெஜெடெட் ஆக்க வேண்டும். ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் பல கெஜெடெட்களை இயக்குபவராக இருப்பதால் அப்பதவிகளையும் கெஜெடெட் ஆக்க வேண் டும். இராதாபுரம் துணை தாலுகாவை தனித் தாலுகாவாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது பஸ் டிரான்ஸ்போர்ட்டை அரசு எடுத்துக் கொண்டிருக் கிறது. எங்கெங்கு பஸ் போகிறது, அதை எப்படி நிர்வகிக்க வேண்டும், சிறு கிராமங்களுக்கு எப்படி செலுத்த வேண்டுமென்று அதைக் கவனிக்க அரசு நிர்வாகப் பஸ்ஸைப் பொறுத்து, கன்னியாகுமரி மாவட்ட ஜாயின்ட் டைரக்டர் ஆப் டிரான்ஸ்போர்ட்டை திருநெல்வேலி மாவட்ட டெவலப்மென்ட் கவுன்சிலுக்கு உறுப்பினராக ஆக்க வேண்டு மென்று கேட்டுக்கொண்டு வளர்ச்சி மன்றக் கூட்டத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் பொறுப்பேற்க வேண்டியவராக இருக்கிறார். அவருடைய வேலைப் பளுவைக் குறைத்து, அங்கங்கே டெவலப்மென்ட் கவுன்சிலுக் கென்று தனி அதிகாரியை அமைத்து, நல்லவிதமாக முன்னேற்றம் காணவேண்டுமென்று சொல்லிக்கொண்டு அவரே மாவட்ட பொறுப்பில் இருப்பதால் நாங்குநேரி ஊரில் மருத்துவ மனையொன்று இருக்கிறது

நிலம் இலவசமாகக் கிடைத்ததன் காரணமாக அந்த ஊருக்கு வெளியே கட்டடம் கட்ட நினைக்கிறார்கள். மக்கள் வசதியைக் கவனித்து அதனை ஊருக்குள்ளேயே அமைக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு சட்டப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நிலவரி, மாநில ஆயத் தீர்வை, முத்திரைத்தாள்கள்—நிர்வாகம், மாவட்ட நிர்வாகமும் பல்வகையும் ஆகியவற்றிற்காக அமைச்சர் அவர்கள் கோரியிருக்கிற இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்கும் முகத்தான், தமிழகம் என்ற இந்த ஆட்சிக் குடும்பத்திலே வருவாய் சம்பாதிக்கின்ற பிள்ளையாக விளங்குகின்ற மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களை நான் பாராட்டுகின்றேன். ஒரு வீட்டில், எப்படி சம்பாதிக்கிற பிள்ளையை செல்லப் பிள்ளையாக நடத்துகிறோமோ, அப்படி செல்லப் பிள்ளையாகிய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சம்பாதிக்கின்ற பணத்தைக் கேட்கும்போது, இன்னும் அதிகம் தர அரசு தயாராக இருக்கும் நிலையிலே, நிச்சயமாக இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்கத் தயாராக இருக்கிறோம்.

இன்றையதினம் ஏற்பட்டிருக்கிற பெரிய வளர்ச்சிகளையும் முன்னேற்றங்களையும் பாராட்ட வேண்டியிருக்கிறது. ஆனால் மாண்புமிகு அமைச்சர்களும் முதலமைச்சர் அவர்களும் முன்பு ஒருமுறை குறிப்பிட்டது போல பந்தயக் குதிரை வேகத்திலே இந்த அரசும் அமைச்சர்களும் ஈடுபட்டு முன்னேற்றம் காண விழைகின்ற நேரத்திலே, அலுவலாளர்கள் அந்த வேகத்திலே அவர்களோடு ஒத்து வருகிறார்களா என்பது சந்தேகமாகத்தான் இருக்கிறது. அதுவும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இதிலே ஈடுபடுகிற நேரத்திலே, அதிகாரிகளுக்கு இதுவரை உள்ள வேகத்தை விட அதிகம் தேவைப்படுகிறது, நிச்சயமாக தாலுக்கா மட்டத்திலே, என்று அன்றாடம் சென்று வருகின்றவர்கள் என்ற முறையிலே உணர்ந்து கூறுகின்றேன். ஆகவே, அமைச்சரவர்கள் செல்கின்ற வேகத்திலே, அவருக்கு ஈடுகொடுத்து, அதிகாரிகளும், பிரச்சினைகளைத் தீர்க்க ஒத்துழைப்புக் கொடுக்கவேண்டும். அப்படி இருந்தால்தான் பொதுமக்களுடைய குறைகள் நீங்கி பொதுமக்களுடைய நன்மைகள் பேணிக் காக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பட்டா வழங்குகின்ற விஷயத்தைப் பற்றி இங்கே பேச வேண்டுமென்றால், அதைப் பாராட்டுவதற்கு எத்தனை மணி நேரம் வேண்டுமானாலும் பேசலாம் என்ற முறையிலே, இந்த நாட்டை ஆளுகிற மக்களெல்லாம் தெரு ஓரங்களிலும், குப்பை மேடுகளிலும், மாண்புமிகு பரம்பரையினுடைய மக்கள் எல்லாம் வாழ்வதற்குக் கூட, வசிப்பதற்குக் கூட இடம் இல்லாத நிலையை மாற்றி, இந்த நாட்டு ஏழைகள் எல்லாம் கைகட்டி வாழவேண்டிய நிலையைமாற்றி, அவர்களுக்குத் தேவையான இடமாவது தரவேண்டுமென்ற அடிப்படையிலே இன்றைய தினம் பட்டா வழங்குகின்ற திட்டம் செயல்படுகிறது. பல லட்சக்கணக்கான மக்களுக்குப் பட்டா வழங்கப்படுவதை நான் மனதார வாழ்த்த கடமைப்பட்டிருக்கிறேன்.